# 13

# சிலுவை: அதன் தாக்கம்

இயேசு சிலுவையலறையப்பட்டது சாதித்தது என்ன? அவருடைய மரணம் ஒரு திடீர் விபத்தல்ல, அல்லது தமது உயர்ந்த நோக்கத்திற்கு கவர்ந்து இழுக்கும்படி தம்மையே பலியாக்கிக் கொண்ட வெறும் தியாக மரணமட்டுமல்ல. இயேசு தீய சக்திகளினால் மேற்கொள்ளப்படவில்லை, ஆனால் அவைகளின் மேல் பெரும் வெற்றியைச் சாதித்தார். அவருடைய மரணம் தேவனுடைய ஆறு பெரிய நோக்கங்களை வல்லமையாய் சாதித்தது.

## அவருடைய மரணம் என்பது ஏற்பாட்டை நிறைவேற்றியது

இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொன்னார்,

> ... நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனத்தையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 5:17, 18).

பழைய ஏற்பாடு முழுவதும் எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியாவானவர் இயேசுதான். அவர் சிலுவையில் மரித்தபோது, "கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாயிருந்த" பழைய உடன்படிக்கை எடுத்துப் போடப்பட்டது (கலாத்தியர் 3:24, 25).

> ... எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, <u>சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து</u>, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபேசியர் 2:14-16; வலியுறுத்துதல் என்னுடையது).

சிலுவையிலே, இயேசு பழைய உடன்படிக்கையை நிறைவேற்றி, "தமது மாம்சத்தினாலே" சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை அழித்தார் - இன்னொரு வார்த்தையில் சொன்னால், மோசேயின் பிரமாணம் - யூதர்களையும் புறஜாதிகளையும் பிரித்து வைத்ததை அழித்தார்.

இயேசு மரித்தபொழுது, அவர் சத்தமிட்டு, "எல்லாம் முடிந்தது" என்று

*சொன்னார்! அந்த பயங்கரமான நிகழ்ச்சியின்போது "முடிந்த" ஒன்று மோசேயின் மூலம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம். இயேசு மரித்தபோது தேவாலயத்தில் இரண்டாகக் கிழிந்த திரைச்சீலை தேவனுடைய பிரசன்னத்தையே கிட்டிச்சேரும்படி பழைய வழி நிராகரிக்கப்பட்டு புதிதும் சிறப்பானதுமான வழி அறிமுகப்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டுகிறது.*

## *அவரது மரணம் புதிய ஏற்பாட்டை திறந்து வைத்தது*

*அவர் கர்த்தருடைய பந்தியை ஸ்தாபிதம் பண்ணின போது, இயேசு சொன்னார், "இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடையது இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு 26:28). இயேசு தமது சித்தத்தை அமல்படுத்த அவருடைய மரணம் அவசியமானதாயிருந்தது (அதாவது புதிய ஏற்பாடு, அல்லது உடன்படிக்கை). எபிரெயர் 9:16-23 சொல்லுகிறது,*

> *ஏனென்றால், எங்கே மரணசாசனமுன்டோ அங்கே மரணசாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே. அந்தப்படி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டை பண்ணப்படவில்லை. எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின் மேலும் ஜனங்கள் எல்லார்மேலும் தெளித்து: "தேவன் உங்களுக்கு கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே" என்று சொன்னான் ...*
>
> *ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் சுத்தி கரிக்கப்பட வேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே.*

*முதலாம் உடன்படிக்கை இரத்தத்தினாலே பிரதிஷ்டை பண்ணப்பட்டதுபோல, புதிய உடன்படிக்கையும் பண்ணப்பட்டது. புதிய உடன்படிக்கையை துவக்கி வைக்க கிறிஸ்துவின் மரணம் அவசியமாயிற்று. புதிய ஏற்பாட்டை இணைக்கும் குறிப்பான உபதேசங்கள் கிறிஸ்துவின் மரணத்திலிருந்து தவிர்க்க இயலாத அளவுக்கு தொடர்புண்டாக்குகிறது - உதாரணமாக, ஞானஸ்நானத்தைக் குறித்த உபதேசம் (ரோமர் 6:3, 4), கர்த்தருடைய பந்தி மற்றும் சபையைக் குறித்த உபதேசம்.*

## *அவரது மரணம் சபையைச் சம்பாதித்தது*

*இயேசு சபையை ஸ்தாபித்தார் (மத்தேயு 16:16-19), ஆனால் அதை சம்பாதிக்கவும் செய்தார். எபேசு சபையின் மூப்பர்களிடத்தில், பவுல் சொன்னார், "ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட* தமது சபையை *மேய்ப்பதற்குப்*

பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (நடபடிகள் 20:28; வலியுறுத்துதல் என்னுடையது). எபேசியர் 5:23-25ல், கிறிஸ்து, "சரீரத்துக்கும் இரட்சகராயிருக்கிறார்" (அதாவது சபைக்கு; எபேசியர் 1:22, 23). மேலும் "கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து ... அதற்காகத் தம்மையே ஒப்புக் கொடுத்தார்" என்று அறிகிறோம்.

தேவனுடைய திட்டத்தில் சபை முக்கியமானதுதானா? ஆம்! தம்முடைய இரத்தத்தினாலே சபையை கிரயத்துக்குகொள்ளும்படி கிறிஸ்து மரித்தார்! கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து அதை சேவிக்கும்படி மரித்தார்! சபை இரத்தத்தை விலையாகக் கொடுத்து வாங்கிய ஸ்தாபனம்! நாம் அதைக்குறைத்து மதிப்பிடாமல், நாம் அதின் விசுவாசமுள்ள அங்கத்தினராய் இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

## அவரது மரணம் பாவத்துக்கு நிவாரணமளித்தது[1]

கிறிஸ்துவின் மரணம் பாவங்களை எடுத்துப்போடுகிறது என்று புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது. பவுல் எழுதுகிறார், "வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார்" (1 கொரிந்தியர் 15:3ஆ; மேலும் காண்க 1 பேதுரு 3:18; 2:24). கலாத்தியர் 1:4அ கிறிஸ்து, "இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி ... நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்" என்று விளக்கப் படுத்துகிறது. கர்த்தருடைய பந்தியை ஸ்தாபித்த பொழுது, இயேசு சொன்னார், "அநேகருக்காக சிந்தப்படுகிற ... என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்றார் (மத்தேயு 26:28). தேவனுடைய அன்பினாலே நம்மை நீதிமானாக்கும்படி நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார். பின்பு வெற்றிகரமாக இயேசு உயிரோடு எழுப்பப்பட்டார் (ரோமர் 4:25; 5:8).

பாவத்தின் பாதிப்புக்கு இயேசுவின் மரணம் எப்படி நிவாரணத்தை அளித்தது? பாவத்தின் விளைவுகளும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் அது சம்பந்தமாக அளித்த பயன்களும் வேதபுத்தகத்தில் பல வழிகளில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. பின் வரும் கருத்துக்கள் பரஸ்பரம் விதிவிலக்கல்ல; இந்த சத்தியங்கள் ஒன்றின்மேல் ஒன்று கவிந்திருக்கின்றன. தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ ஆராய்வோமானால், கிறிஸ்து தமது மரணத்தினால் சிலுவையில் சாதித்தவைகளையும் பாராட்ட நமக்கு உதவுகின்றன.

### இனியும் பிரிவினைகள் இல்லை

*மனிதனுடைய பாவம் தேவனிடத்திலிருந்து அவனைப் பிரிக்கிறது* (ஏசாயா 59:2). ஆதாம், ஏவாள் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டது போலவே, அவர்கள் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டபோது நடந்தது போலவே, நமது பாவங்களின் விளைவுகளினாலே நாமும் தேவனுடைய பிரசன்னத்தில் மறுதலிக்கப்படுவோம். நாம் பாவம் செய்வதற்கு முன், தேவனுடைய சிநேகிதர்களாயிருந்தோம்; பாவம் செய்த பின், நாம் அவருடைய சத்துருக்களானோம்.

*கிறிஸ்துவின் மரணம் நம்மை தேவனோடு ஒப்புரவாக்குகிறது*. பாவம் நம்மை தேவனிடத்திலிருந்து பிரித்து வைத்திருக்கையில், கிறிஸ்துவின் மரணம் நம்மை தேவனுக்கு அருகாமையில் கொண்டுபோய் நம்மை அவருடன் ஒப்புரவாக்குகிறது. கிறிஸ்துவின் மரணத்தின் மூலம், நாம் மீண்டும் தேவனோடு

சிநேகிதராகிறோம். ரோமர் 5:10அ சொல்லுகிறது, "நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடன் ஒப்புரவாக்கப் பட்டோம்." பவுல் எழுதினார்,

> அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் *தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று* நினைத்துக் கொள்ளுங்கள். *முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்* (எபேசியர் 2:12, 13; வலியுறுத்துதல் என்னுடையது).

தேவன் "கிறிஸ்து மூலமாய் தம்மோடு நம்மை ஒப்புரவாக்கிக் கொண்டார்." அவர் "கிறிஸ்துவுக்குள் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் நம்மை தம்மோடே ஒப்புரவாக்கினார்" (2 கொரிந்தியர் 5:18, 19). ரோமர் 5:11 திருப்பிச் சொல்லுகிறது, "நம்முடைய [கர்த்தராகிய, இயேசு கிறிஸ்து] மூலமாய் ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கிறோம்" (மேலும் கொலோசெயர் 1:20ஐக் காண்க).[2] தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பவர்களாகிய பாவிகளை அவரோடு ஒப்புரவாக்கவே இயேசு மரித்தார்!

**இனி ஆக்கினைத்தீர்ப்பில்லை**

*மனிதனுடைய பாவம் தேவனுடைய கோபாக்கினையை வரவழைக்கிறது* (யோவான் 3:36; எபேசியர் 5:6). பாவம் தேவனிடத்திலிருந்து மனிதனை பிரிப்பது மாத்திரமல்ல, ஆனால் அது தேவனுடைய கோபத்தைத் தூண்டுவதோடு, மனுஷனை அவரது கோபாக்கினைக்கு உட்படுத்தவும் செய்கிறது. பவுல், "மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (ரோமர் 1:18) என்று எழுதினார்.

*கிறிஸ்துவின் மரணம் தேவனுக்கு கிருபாதாரபலியாக செயலாற்றுகிறது.* அதாவது, சிலுவை தேவனை சாந்தப்படுத்தும் செயல் என்று பொருள்; இயேசுவின் மரணம் தேவன் மனிதனைத் தயவோடு பார்க்கச் செய்கிறது.[3] தேவன் இயேசுவை "விசுவாசத்தின் மூலமாக அவருடைய இரத்தத்தில் கிருபாதார பலியாகக் காண்பித்தார்" (ரோமர் 3:25). எபிரெயர் 2:17 சொல்லுகிறது, "அவர் [கிறிஸ்து] ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது." யோவான் எழுதியதாவது,

> என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு, இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். *நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே*; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்

*(1 யோவான் 2:1, 2; வலியுறுத்துதல் என்னுடையது).*

பின்னதாக அதே நிருபத்தில், "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவான் 4:10) என்றார்.[4] கிறிஸ்துவின் இரத்தம் தேவனுடைய கோபத்தை ஆற்றுவதால், பவுல் எழுதினார், "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, *கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே*" (ரோமர் 5:9; வலியுறுத்துதல் என்னுடையது).

இதே கருத்தை மற்றொருவகையில் சொன்னால் கிறிஸ்து நம்முடைய பாவத்திற்கான பலியாக மரித்தார். பின் வருமாறு நாம் வாசிக்கிறோம்,

> [கிறிஸ்து ... பிரதான ஆசாரியராய்] கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார். அதெப்படியெனில் காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீர சுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே *தம்மைத்தாமே* பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய *இரத்தம்* ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியை செத்தகிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம் (எபிரெயர் 9:11-14; வலியுறுத்துதல் என்னுடையது).

பாவ நிவாரணமாக பழைய உடன்படிக்கையின் கீழ் மிருகபலி கோரப்பட்டது (ஆனால் அதன்முடிவு பிரயோஜனமின்மையே; எபிரெயர் 10:4). கிறிஸ்துவின் மரணம் இன்று நமது பாவங்களுக்கு நிவாரணம் அளிக்கிறது; (அதுவே பழைய ஏற்பாட்டில் செய்த பாவங்களுக்கும் நிவாரணமாயிற்று; எபிரெயர் 9:15). தேவ கோபத்தை தவிர்க்க, அன்று போலவே, இன்றும் பாவநிவாரணம் தேவையான ஒன்று, ஆகையால் தேவனுடைய கோபாக்கினையை பெறவிரும்பாத யாரும் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட வேண்டும்!

**இனி அடிமைத்தனம் இல்லை**

*மனிதனுடைய பாவம் அவனை அடிமையாக்குகிறது* (யோவான் 8:34ஆ). ரோமர் 6:16-18ல் நாம் வாசிக்கிறோம்,

> மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும் நீதிக்கு ஏதுவான கீழ்ப்படிதலுக்கானாலும் எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமை களாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமை களாயிருக்கிறீர்கள் என்று அறியீர்களா? முன்னே நீங்கள் பாவத்துக்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட

உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.

எல்லாரும் பாவம் செய்துள்ளதால் (ரோமர் 3:23; 1 யோவான் 1:8, 10), எல்லாரும் பாவத்துக்கு அடிமைகளானார்கள்.

*கிறிஸ்துவின் மரணம் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து பாவிகளை விடுதலையாக்குகிறது.* கிறிஸ்து ஜனங்களை விடுதலையாக்கும்படி வந்தார் (யோவான் 8:32) கிறிஸ்தவர்களாக, "பாவத்திலிருந்து விடுதலை [அல்லது சுதந்திரம்]யை கிறிஸ்து தமது இரத்தத்தினாலே கொடுத்திருக்கிறார்" என்று சொல்லலாம் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5). நமது பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக ஏதுவான கிரயத்தை இயேசு செலுத்தி விட்டார். "அநேகருக்கு மீட்பை அளிக்கும்படியாகவே" தாம் வந்ததாக, அவர் சொன்னார் (மத்தேயு 20:28; மாற்கு 10:45; காண்க 1 தீமோத்தேயு 2:5, 6).[5] அவர் நம்மை மீட்டார் - அதாவது, நம்மை அவர் மறுபடியும் விலைகொடுத்து வாங்கினார் - சிலுவையிலே அவர் மரித்ததினாலே இப்படிச் செய்தார். ஆகையால், அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே, நமக்கு மீட்பு இருக்கிறது என்று சொல்லலாம், "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் உண்டாயிருக்கிறது" (எபேசியர் 1:7). கிறிஸ்தவர்களாக இருக்கிற நாம், "நாம் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டோம்" என்ற உண்மையினால் சந்தோஷப்படலாம் (1 கொரிந்தியர் 6:20). நாம், "அழிவுள்ள வித்துக்களாகிய பொன்னினாலும் வெள்ளியினாலும் மீட்கப்படாமல்," "குற்றமில்லாத ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டோம்" (1 பேதுரு 1:18, 19; காண்க யோவான் 1:29). பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரே வழி, கிறிஸ்துவிடம் திரும்புவது தான்.

**இனி மரணமும் இல்லை**

*பாவம் ஜனங்களைக் கொல்லுகிறது* (ரோமர் 6:23). பாவம் மனுஷனை அடிமையாக்கி, அவனுக்கு சம்பளத்தைக் கொடுக்கிறது, ஆனால் பாவத்தின் சம்பளம் மரணம்! ரோமர் 6:23ல் பேசப்படுகிற மரணம் (தனிப்பட்ட ஒருவனின் பாவத்தின் முடிவு சரீரமரணமாக இருந்தாலும்[6]); பாவத்தின் சம்பளம் சரீர மரணமல்ல; மாறாக, அது ஆவிக்குரிய மரணம். அப்படிப்பட்ட மரணம் இப்பொழுதும் தேவனிடத்திலிருந்து பிரித்துவைத்துள்ளது, மற்றும் நித்திய மரணத்துக்கு வழி நடத்துகிறது அல்லது என்றென்றைக்கும் தேவனிடத்திலிருந்து பிரிவினையை ஏற்படுத்துகிறது! எபேசு சபை கிறிஸ்தவர்களுக்கு பவுல் சொன்னார், "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தீர்கள்" (எபேசியர் 2:1).

*கிறிஸ்துவின் மரணம் நம்மை மறுபடியும் வாழ அனுமதிக்கிறது.* "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட [தேவன்] உயிர்ப்பித்தார்" (எபேசியர் 2:5), "கிறிஸ்துவின் இரத்தத்தினாலே" நம்மை தேவனிடத்தில் சமீபமாய் சேர்த்தார் (எபேசியர் 2:13). இயேசு ஜனங்களுக்கு ஜீவனைக் கொடுக்கும்படி வந்தார்; ஆனால் அப்படிச் செய்வதற்கு, அவர் தமது

சொந்த ஜீவனை கொடுக்க வேண்டியதாயிற்று (யோவான் 10:10, 11). நாம் பிழைத்திருக்கும்படி அவர் மரித்தார்! சிலுவையினாலே, நாம் மீண்டும் வாழ முடியும்!

**இனி ஆக்கினைத் தீர்ப்பில்லை**

பாவம் ஆத்துமாக்களை ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாக்குகிறது; தேவநீதி பாவத்திற்குத் தண்டனையாக நித்திய ஆக்கினைத் தீர்ப்பை அளிக்கிறது. அதாவது, நமது பாவங்களினால் உலகளாவிய தெய்வத்தீர்ப்பின்படி, நாம் நரகாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டோம். ஏன்? முற்றிலும் பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக பாவம் அவமதிப்பிற்குரிய காரியமாகும் (சங்கீதம் 145:17). அவர் முற்றிலும் செம்மையான நீதியுள்ளவர் (உபாகமம் 32:4) தேவன் பரிசுத்தராயிருக்கிறபடியால், அவர் பாவத்தை சகித்துக் கொள்ள மாட்டார். அவர் நீதியுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் பாவத்தைத் தண்டித்தே ஆகவேண்டும். நீதியுள்ள தண்டனையை அளவிடப்படாத தேவனுக்கு எதிரான பாவத்துக்கு கொடுக்கப்பட வேண்டுமானால் அது நரகத்தில் முடிவேயில்லாத ஆக்கினையாக மட்டுமே இருக்க முடியும்!

கிறிஸ்துவின் மரணம் நமது பாவங்களுக்கு அபராதம் செலுத்துகிறது.[7] தேவன் அன்பு நிறைந்த தேவன் (1 யோவான் 4:8, 16, 19) நாம் பாவமுள்ளவர் களாயிருந்தாலும் அவர் நம்மை இரட்சிக்க விரும்புகிறார் (2 பேதுரு 3:9). பாவத்தைத் தண்டித்து பாவியை இரட்சிக்க அவர் வழியை ஏற்படுத்தினார். நமது பாவங்களை அவர் கிறிஸ்துவின் மேல் வைத்தார்! சிலுவையிலே இயேசு, பாவத்திற்கான தண்டனையை, நீதியுள்ள ஆக்கினையை நமக்காக அனுபவித்தார். கொல்கொதாவில் அவர் மரித்தபோது அவர் நமது குற்றங்களைச் சுமந்தார்! வேதம் சொல்லுகிறது,

> நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:8).

> நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 பேதுரு 2:24).

> என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப் பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம் (எபிரெயர் 2:9).

> ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் (1 பேதுரு 3:18; மேலும் காண்க ரோமர் 5:18, 19; 2 கொரிந்தியர் 5:14, 15).

உலகத்தின் அனைத்துப் பாவங்களையும், நமது இரட்சகர், சிலுவையின் மேல் சுமந்தார். “மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் - என்று

*எழுதியிருக்கிறபடி - கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" (கலாத்தியர் 3:13). "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, [தேவன்] பாவமறியாத அவரை [இயேசு கிறிஸ்துவை] நமக்காக பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21).*

*கிறிஸ்துவின் சிலுவை மரணம் தேவன் தமது நீதியை நிறைவேற்றவும் - பாவத்தை தண்டிப்பவராக - நீதியாக்குபவராகவும் - தகுதியற்ற பாவிகளை இரட்சிப்பவராகவும் செயலூக்கம் கொடுத்தது. பவுல் எழுதினார்:*

> *... எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள்; தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத்தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியை காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதாரபலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:23-26).*

*சிலுவையின்மேல், நீதியின் தேவை சந்திக்கப்பட்டது: பாவம் தண்டிக்கப்பட்டது, நீதிமானாக்கப்படுதல் சாத்தியமாக்கப்பட்டது. சிலுவையில், மரணத்தின் தண்டனை, நித்திய ஆக்கினை, எடுத்து போடப்பட்டதால் நாம் மீண்டும் வாழும்படி செய்யப்பட்டது!*

*இரட்சிப்பை நாம் என்ன பதத்தில் நினைத்துப் பார்த்தாலும் - மீட்பு, ஒப்புரவாக்கப்படுதல், நீதிமானாக்கப்படுதல், பாவ நிவர்த்தி, புதிய ஜீவன் அல்லது புதிய பிறப்பு, அல்லது விடுதலையாக்கப்படுதல் - இயேசு சிலுவையில் சிந்தின இரத்தம் அதை சாத்தியமாக்குகிறது! சிலுவையலறையப்படுதல் மட்டுமே நம்முடைய பாவங்களுக்கு அளிக்கப்பட்ட ஒரே நிவாரணம்.[8]*

## அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் பிசாசை தோல்வியுறச் செய்தது

*எபிரெயர் 2:14, 15ல் நாம் வாசிக்கிறோம்,*

> *ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத் தனத்துக்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.*

*இயேசு சிலுவையில் அறையப்பட்ட பொழுது, சாத்தான் மிகப்பெரிய வெற்றியை அடைந்ததைப்போலக் காணப்பட்டது. தேவனுடைய குமாரனையே வெற்றிகரமாக மேற்கொண்டதாக ஒருவேளை அவன் நினைத்தான். எப்படியிருப்பினும், வெளித்தோற்றமான காரியங்கள் வஞ்சனையுள்ளவைகளும்*

தோல்விகளையே தேவனுடைய மகத்தான வெற்றியாக மாற்றுதலும் உயிர்த்தெழுதலும் நிருபித்தது. சிலுவையின் மேல், இயேசு பிசாசை தோல்வியுறச் செய்தார், மரணத்தை வெற்றி கொண்டார், மரண பயத்திலிருந்து நம்மெல்லாரையும் விடுதலையாக்கினார்.

## அவருடைய மரணம் தேவஅன்பை நமக்கு காட்டியது

தேவன் எவ்வளவாய் நம்மை அன்புகூருகிறார்? சிலுவை அதற்கு சாதுரியமாக பதிலளிக்கிறது:

> தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1 யோவான் 4:9, 10; காண்க யோவான் 3:16).

இயேசு சொன்னார், “ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை” (யோவான் 15:13). இயேசு சிலுவையில் மரித்தபோது, விளங்கப் பண்ணிய அன்பு அதைக் காட்டிலும் பெரியது, ஏனெனில் அவர் தமது சிநேகிதருக்காக மட்டும் மரிக்கவில்லை, தமது சத்துருக்களுக்காவும் மரித்தார் (ரோமர் 5:8). இதைக் காட்டிலும் இன்னும் அதிகமாய் தேவனுடைய அன்பை விளங்கப்பண்ணுதலை நாம் கேட்க இயலாது!

## முடிவுரை

இந்த பூமியிலே சில விஷயங்கள் அதிகபட்ச பலமுள்ளவை, ஆகிலும் கிறிஸ்துவின் மரணத்தைக் காட்டிலும் பலமுள்ளது வேறெதுவுமில்லை. இயேசுவின் மரணம் பழைய ஏற்பாட்டை நிறைவேற்றி புதிய ஏற்பாட்டை திறந்து வைத்தது. தமது மரணத்தினால், அவர் சபையை சம்பாதித்தார், பாவத்திற்கு நிவாரணமளித்தார், பிசாசை தோல்வியுறச் செய்தார், மற்றும் தேவ அன்பை விளங்கப்பண்ணினார்.

மிகமுக்கியமான உண்மையென்னவெனில், அவர் மரித்தபோது, எல்லாரும் இரட்சிக்கப்படும்படி இயேசு மரித்தார். நீங்கள் இன்னும் இரட்சிக்கப்படாதிருந்தால் (கிறிஸ்தவனாயில்லாவிட்டால்), இயேசுவில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உங்களுக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்களின் பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்று, சிலுவையினால் உங்களுக்கு வரமாக அளிக்கப்பட்ட இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துவை புறந்தள்ளுவது உங்கள் இரட்சிப்பின் ஒரே நம்பிக்கையை புறந்தள்ளுவது போன்றது. உங்களை எப்பொழுதுமே எவருமே நேசித்திராத அளவுக்கு அதிகமாகவே நேசிக்கிற ஒருவரை புறந்தள்ளாதீர்கள்!

குறிப்புகள்

[1]மேலும் விவரமாக இந்தக் கருத்தைக் கற்றுக்கொள்ள, காய் ரோப்பரின், "If Jesus Was Such a Good Man, Why Did He Die Like a Common Criminal?" in "Contemporary Religious Questions," *Truth for Today* (February 1991): 41-44 அந்தப் பாடம் இணைதளத்திலும் உள்ளது http://www.biblecourses.com/english/en_lessons/EN_199102_10.pdf. [2]புதிய அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் வேதாகமத்தில் ரோமர் 5:11ல் "reconciliation" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள வார்த்தை KJV யில் "atonement" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ரோமர் 5:11ல், "பாவநிவாரணம்" என்று (ஆங்கிலத்தில்) குறிப்பிடப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையாகிய *katallagē,* என்பது, ஒரு நிவாரணத்தின்படி, "பகைமையாயிருந்த நபர்களின் நிலைமாறி அல்லது ஒப்புரவாகி ஒரே நட்பாக வருவது என்று பொருள். அது *apolutrōsis* ... மீட்பு, இரட்சிப்புக்கு தெய்வீகச் செயல் தேவகோபம் இல்லாமல் போதல் போன்ற விளைவுகளைக் குறிக்கும்" (Spiros Zodhiates, ed., "Lexical Aids to the New Testament," *Hebrew-Greek Key Word Study Bible* [Chattanooga, Tenn.: AMG Publishers, 1977], 1846). [3]"கிறிஸ்துவின் சிலுவைப்பலி பாவத்துக்கு எதிரான நீதியுள்ள தேவகோபத்தை அமைதிபடுத்தியது (ரோமர் 1:18) பாவிகளினிமித்தம் தேவனுடைய நிலை மாற்றியமைக்கப்பட்டது" (James Smeal, *Study Guide for DC 301V, Systematic Christian Doctrine Videotape Course* [Florence, Ala.: Heritage Christian University, n.d.], 28). [4]பயன்படுத்தப்பட்டுள்ள மாற்றுவார்த்தைகள், "பாவ நிவர்த்தி" என்று 1 யோவான் 2:2ல் "பாவ நிவர்த்தியின்பலி" எனும் வார்த்தையை உள்ளடக்கியது (NRSV; NIV; see the REB), "ஈடுகட்டுதல்" (RSV; NAB; see the NJB), "நமது பாவக்கறைக்கு நிவாரணம்" (NEB), "நமது பாவங்களை எடுத்துப்போடும் பலி" (CEV), மற்றும் தனிப்பட்ட "பாவநிவர்த்தி" (Phillips). [5]"மீட்கும் பொருள் எனும் வார்த்தை 'கடத்தப்படுகிற' சம்பவங்களுடன் அடிக்கடி சம்பந்தப்படுத்தப்படுவதைக் கேள்விப்படுவோம்." "கடத்தல்காரர்கள்" கடத்தலுக்கு பலியானவரை (தை) விடுதலை செய்வதற்குமுன் கோரப்படும் பிணையத்தொகையே மீட்கும் பொருள் கிரேக்க வார்த்தையான (*lutron* என்பது) மொழிபெயர்ப்பின் கருத்தும் இது தான், ஆகிலும் அந்த வார்த்தையின் பொருள் அதைக்காட்டிலும் விரிவானது. பழைய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்பான, செப்துவஜீந்த் கிரேக்க மொழிபெயர்ப்பில், ஒரு அடிமையை மீட்க செலுத்தும் தொகை, யுத்தத்தில் யுத்தக் கைதிகளை விடுதலை செய்யக்கோரும் பிணையத்தொகை, மற்றும் வேறு வகைகளில். *Lutron* எனும் வார்த்தையை சுருங்கச் சொல்லின் அதன் அடிப்படைப் பொருள் "விடுதலை செய்வதற்காக செலுத்தும் பிணையத் தொகை, என்பது."

"புதிய ஏற்பாட்டில், இந்த வார்த்தை பாவத்தின் குற்ற உணர்வுகளிலிருந்து விசேஷமாக விடுதலையாக்குவதற்காக செலுத்தப்படும் கிரயம், லூட்ரான் எனும் வார்த்தை மத்தேயு 20:28 மற்றும் மாற்கு 10:45ல் மட்டுமே காணப்படுகிறது. ஆனால் சம்பந்தப்பட்ட வார்த்தை மற்ற வசனப்பகுதிகளில் காணப்படுகிற மீட்பு எனும் பதம் பயன்படுத்தப் படுகிறது (காண்க ரோமர் 3:24; எபேசியர் 1:7; மற்றும் எபிரெயர் 9:12), 1 தீமோத்தேயு 2:5, 6ல் பேசப்படுகிற பிரதான வசனப்பகுதியும் இதில் அடங்கும் ..." (David L. Roper, *The Life of Christ, 2 - A Supplement,* Truth for Today Commentary [Searcy, Ark: Resource Publications, 2003], 221-22). [6]மேலும் ஆதாமின் பாவத்தால் எல்லாமனுஷரும் சரீர மரணத்தை அடைகின்றனர். [7]லியோன் மோரீஸ் என்பவர் பின்வரும் கருத்துக்களை வெளியிடுகிறார்: "ஆக மரித்தல் என்பது கிறிஸ்து மரித்தது [போன்ற] மரணத்தை பாவத்தின் சம்பளம் எனலாம். நமது பாவங்களின் விளைவாக சரிக்கட்டுதலுக்காக அவருடைய மரணம் கிரியை செய்தது. மரணத்தில் நாமும் நம்மை உட்படுத்துகிறோம். கிறிஸ்து

*நமது உட்படுத்தலை ஏற்று நம்மை விடுதலையாக்கினார்"* (Leon Morris, "The Centrality of the Cross," *Christianity Today* 10 [18 March 1966], 15). [8]கிறிஸ்துவின் இரத்தம் புறம்பான பாவிக்கு பாவப் பிரச்சனையின் நிவாரணமாகும் (அதாவது கிறிஸ்தவரல்லாதோருக்கு); கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக மட்டுமே பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாக மாற முடியும். கிறிஸ்தவர்களுக்கும் உண்மையானது, "... நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; *அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்"* (1 யோவான் 1:7; வலியுறுத்துதல் என்னுடையது).